DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.16

| | |
|---|---|
| Name | : Dr.E.Kathiravan |
| Father's Name | : Elumalai |
| Age | : 49 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 18th day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் DM(Critical Care Medition) படித்து வருகிறேன். கடந்த 21.05.2011 முதல் 29.05.2015 வரை நான் புழல் மத்திய சிறை – II ல் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தேன். நான் அங்கு பணிபுரிந்த காலத்தில் சிறை வளாகத்தில் அமைந்திருக்கும் மருத்துவ அலுவலர் குடியிருப்பில் வசித்து வந்தேன். 14.01.2012 அன்றிரவு சுமார் 10.40 மணியளவில் நித்யா என்ற நித்யராஜ் என்ற நபரை விசாரணை சிறைவாசியாக அனுமதிக்கப்பட அவரை காவலர்கள் புழல் மத்திய சிறை – II க்கு கொண்டுவந்திருந்தனர். அவர்கள் வரும்போது அண்ணாநகர் புறநகர் மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பெறப்பட்ட புறநோயாளி சீட்டை உடன் கொண்டுவந்திருந்தனர். அண்ணாநகர் புறநகர்

மருத்துவமனையில் பெறப்பட்ட புறநோயாளிகள் சீட்டில் மேற்படி நபர் இரண்டு கைகளையும் தூக்க முடியவில்லை என்றும் அவருக்கு இது போல் மூன்று முறை தோள்பட்டை விலகல் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுருந்தார்கள், எனவே அவரை மேற்படி சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தாகவும் குறிப்பிட்டு இருந்தார்கள். கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பெறப்பட்ட புறநோயாளிகள் சீட்டில் DAOS அவர்களது கருத்து கேட்டிருந்தார்கள், அவரை DAOS பரிசோதித்து நுண்கதிர் புகைப்படம் எடுத்து எந்த விதமான எலும்பு முறிவும் இல்லை என்று குறிப்பிட்டு அவரது துறையில் சிகிச்சை எதுவும் தேவையில்லை என்று குறிப்பிட்டிருந்தார். நான் அவரை பார்த்த போது அவர் தனது இரண்டு கை தோள் பட்டைகளில் வலி இருப்பதாகவும் கைகளை தூக்க முடியவில்லை என்றும் கூறினார், அவரது உடம்பின் இரண்டு கைகளிலும், இரண்டு கணுக்கால் மூட்டுகளிலும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன, வயிற்றின் இடது பக்கத்தில் கன்றிய காயம் காணப்பட்டது. எனவே மேற்படி சிகிச்சைக்காக அரசு ராயப்பேட்டை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல நான் பரிந்துரைத்தேன். என்னிடம் காட்டப்படும் மருத்துவ சீட்டுதான் அது, அது **அ.சா.ஆ.7**. என்னிடம் காட்டப்படுவது புழல் மத்திய சிறையில் பராமரிக்கப்படும் சிறையில் அனுமதிப்பதற்கு முன்பான Health Screening Report, அது **அ.சா.ஆ.8.** அதையொட்டி அவரை அழைத்துவந்த காவலர்களே அவரை ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். பின்னர், 15.01.2012 அன்று மாலை 6.30 மணியளவில் சிறை Control ரூமிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது, ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு நோயாளியை கூட்டிச் சென்ற காவலர்கள் என்னை அங்குள்ள மருத்துவர்களிடம் பேசும்படி

கூறியதாக கூறினார்கள். நான் ராயப்பேட்டை அரசு மருத்துவமனை RMO மருத்துவர் திரு.இளங்கோவனிடம் தொலைபேசியில் பேசினேன், அவர் நோயாளி சம்பந்தப்பட்ட அனைத்துத்துறை மருத்துவர்களும் அவரை பரிசோதித்து விட்டார்கள் என்றும், நோயாளிக்கு Cervical பகுதிக்கு MRI Scan எடுக்க வேண்டும் என்றும், அந்த வசதி ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில்தான் உள்ளது என்றும், எனவே சிறைவாசியை திருப்பி சிறைக்கு அனுப்புவதாக கூறினார். நான், அவரிடம் அங்குள்ள Convict Ward லேயே அவரை அனுமதித்து சிகிச்சை வழங்கும்படி கூறினேன், அதற்கு அவர் MRI Scan க்கு எப்போது நேரம் ஒதுக்குவார்கள் என்பது தெரியாது என்றும், எனவே அவரை சிறையில் அனுமதிக்கும் படியும், தேவைப்பட்டால் மறுநாள் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கலாம் என்றும் கூறினார், நான் அதற்கு ஒப்புக் கொண்டேன். நான் மேற்படி தகவலை சிறை control ரூமிற்கு கூறி ஆண் செவிலியரான மணவாளனிடம் நோயாளி வந்தால் அவரை காலதாமதப்படுத்தாமல் சிறையினுள் அனுமதிக்கும்படியும் என்னை தொடர்பு கொள்ளும்படியும் கூறினேன். பின்னர், சுமார் இரவு 8 மணியளவில் மேற்படி சிறைவாசி சிறைக்கு அழைத்து வரப்பட்டதாக எனக்கு தகவல் வந்தது, நான் சிறைக்கு சென்று அவரைப் பார்த்து அவருக்கு வழங்கப்பட்ட புற நோயாளிகள் சீட்டை பரிசீலித்தேன், சிறைவாசியை சிறை மருத்துவமனையில் அனுமதிக்கும்படி பரிந்துரைத்தேன். சிறை மருத்துவமனைக்கு நோயாளியை ஆண் செவிலியர் மணவாளன் சக்கர நாற்காலியில் அழைத்துவந்து இரவு 9.10 மணிக்கு சிறை மருத்துவமனையில் நோயாளி அனுமதிக்கப்பட்டார். அப்போது அவர் நல்ல சுயநினைவிலிருந்தார், அவருக்கு தேவையான மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டது. அவருக்கு வலி இருந்ததால் Dyclofenac ஊசியும் RANITITINE ஊசியும்,

போடப்பட்டது. B–complex மற்றும் Amoxycilin மாத்திரைகள் வழங்கப்பட்டது. ஒரு பாட்டில் GNS–IV மூலம் செலுத்தப்பட்டது. மறுநாள் நான் விடுப்பிலிருந்தேன், அவரை MRI Cervical Scan க்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும் என்று அன்று அலுவலில் இருந்த மருத்துவர் கௌரிசங்கரிடம் தெரிவித்தேன். என்னிடம் காட்டப்படுவது சிறையில் அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்கான மருத்துவக் கோப்பு, அது **அ.சா.ஆ.9.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நித்யராஜுக்கு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் தோள்பட்டை எலும்பு விலகலுக்காக சிகிச்சை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. Subconjectival Hemorrahage க்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டதா என்றால் இல்லை. நோயாளி கையை மேலே தூக்க முடியவில்லை என்று கூறியதற்கும் சிகிச்சை எதுவும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. நுண்கதிர் படத்தை நான் பார்வையிடவில்லை. நோயாளிக்கு அக்குளில் சிராய்ப்பு காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது, அதற்கு சிகிச்சை எதுவும் வழங்கப்பட்டதா என்றால் வலி நிவாரணி மட்டும் வழங்கப்பட்டுள்ளது. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, பெரிய மருத்துவமனை என்றாலும் அங்கு நோயாளிக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளித்திருக்க முடியும் என்றால் சரிதான். இரண்டு முழங்கைகளிலும் சிராய்ப்பு காயங்களும் இரண்டு கைகளும் வீங்கியிருந்ததற்கும், கால்கள் இரண்டும் வீங்கியிருந்ததற்கும், இரண்டு கணுக்கால் மூட்டுகளிலும் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டதற்கும், வயிற்று பகுதியின் இடது பக்கத்தில் கன்றிய காயத்திற்கும் சிகிச்சை எதுவும் வழங்கப்பட்டதா என்றால் வலி நிவாரணி மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. நான் கேட்டுக் கொண்டதற்போல் நோயாளியை ராயப்பேட்டை அரசு

மருத்துவமனையிலுள்ள Convict Ward ல் அனுமதித்து சிகிச்சை அளித்திருந்தால் அவர் ஓரளவு குணமாகியிருப்பார் என்றால் சரிதான். ஒருவருக்கு அவசரமாக MRI Scan எடுக்க வேண்டும் என்றால் உடனடியாக எடுக்க வேண்டும் என்றால் உயிர்போகும் நிலையிலிருந்தால் எடுக்க வேண்டும். ஐந்தாவது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு நான் வாக்குமூலம் கொடுத்த போது நித்யராஜ் என்பவர் மூன்று நாட்களுக்கு முன்பு குடிபோதையில் கீழே விழுந்து விட்டதாக என்னிடம் கூறியதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |